# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 65 /2017**

திரு. தி. கங்காதரன், பி.ஏ.பி.எல்.,
வழக்கறிஞர் உயர்நீதி மன்றம்,
முகமை அலுவலகம்
46, நேதாஜி சாலை,
ஈரோடு–638 001. .. . . மேல்முறையீட்டாளர்
( திரு. T. கங்காதரன்)

எதிர்

1) செயற் பொறியாளர்/இ&பே/நகரியம்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். ரோடு,
ஈரோடு–638 009.

2) உதவி செயற் பொறியாளர்/இ&பே/டவுன்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். ரோடு,
ஈரோடு–638 009.

3) உதவி பொறியாளர்/ இ&பே /கிழக்கு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். ரோடு,
ஈரோடு–638 009. . . . எதிர்மனுதாரர்
( திரு. G.V. பழனிவேல், செயற்பொறியாளர்/
பகிர்மானம்/ நகர்புறம்/ ஈரோடு &
திரு. S. ஆனந்த், உதவி பொறியாளர்/O&M/ கிழக்கு / ஈரோடு )

<u>கேட்புரை நாள் : 24–01–2018</u>

<u>ஆணை நாள் : 17.05.2018</u>

திரு. T. கங்காதரன் அவர்களின் 22.10.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 65 / 2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 24.01.2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u>

மேல்முறையீட்டாளர் அனுமதியற்ற கட்டுமானம் தொடர்பாக புதிய மின் இணைப்போ கூடுதல் மின் இணைப்போ தரக்கூடாது என கோரியுள்ளார்.

2. <u>வழக்கின் சுருக்கம்:</u>

2.1 மேல்முறையீட்டாளர் அனுமதியற்ற கட்டுமானம் தொடர்பாக புதிய மின் இணைப்போ கூடுதல் மின் இணைப்போ தரக்கூடாது என கோரியுள்ளதை கவனத்தில் கொள்ளாமலும் தடை மனுக்கள் மீது முழுமையான கவனம் செலுத்தாமலும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி கையூட்டு பெற்றது ஆகியவைகள் தொடர்பாக ஈரோடு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 31.05.2017 அன்று முறையீடு செய்துள்ளார். மன்றம் மனுதாரரின் முறையீட்டிற்கு 18.09.2017 நாளிட்ட ஆணையை வழங்கியது.

2.2 மன்றத்தின் ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார். இம்மனுவானது மேல்முறையீட்டு மனு எண்.65/2017ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 ஈரோடு மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 18.9.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“முடிவுரை*

*மனுதாரார் மற்றும் மின் கழகத்தரப்பினர் சமர்ப்பித்த ஆதார ஆவணங்களை ஆய்வு செய்ததில் முறையற்ற முறையில் திரு. முகமது சிராஜ் அவர்களுக்கு மின் இணைப்புகள் 004–010–1250, 001–010–1251 மற்றும் 004–010–1252 வழங்கப்பட்டதாக தெரிவித்த புகாருக்கு உட்பட்ட மின் இணைப்புகள் மின் கழகத்தரப்பினர் சமர்ப்பித்த ஆவணங்களின் TNE Distribution Code and Supply Code–ன் படியே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய கட்டணம் செலுத்திய பிறகே மின் கம்பம் நட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதால் மனுதாரரின் வேண்டுகோளின்படி மின் துண்டிப்பு செய்ய இயலாது. எனவே, மனுதாரரின் மனு தள்ளுபடி செய்து இம்மன்றம் இறுதி உத்தரவு வழங்கப்படுகிறது. ”*

## 4. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:

4.1 ஆட்சேபனை மனு, தடை மனு, அறிவிப்பு கடிதங்கள் என 2014 வருடம் முதல் குறிப்பிட்ட MCM44(E) க.எண்.48, நேதாஜி சாலை ஈரோடு –1 உட்பட்ட பகுதியில் இருக்கும் வீட்டிற்கு புதிய மின்இணைப்போ கூடுதல் மின் இணைப்போ தரவேண்டாம் என குறிப்பிட்டு கடிதங்கள் பல அனுப்பியும் இதை மீறி மின்இணைப்புகள் MCM (250, 51, 52 (east) என புதிய மின்இணைப்புகள் மின் ஒழுங்குமுறை விதிகளின் தரப்பில் கூறப்பட்டுள்ள விதிகள் சட்டப் பிரிவு 7 மற்றும் 7(i)ன் 7(ii)ன் படி மீறியும், பெயர் மாற்றம் செய்கையில் ஆவணங்கள் எதுவும் வாங்க பெறாது – பெறப்படாமல் ஒருவர் பெயரில் இருந்து மற்றொருவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கான தொகை ரூ.200/– கட்டணம் வசூலிக்கப்பட்டு பெயர் மாற்றம் செய்ததாக PR No.ERD004ARISIS 1546/20.4.11 தேதி என கணினி மென்பொருள் Project Best நுகர்வோர் பதிவேட்டில் பதிவு ஆகியதாக மின் குறைதீர்மன்ற தலைவர் ஈரோடு உத்தரவில் குறிப்பிட்டு உள்ளார். இதன்படி பெயர் மாற்றம் செய்யும் போது மற்றொருவர் தரக்கூடிய பெறப்படவேண்டிய ஆவணங்கள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய வழங்கல் விதி 7ன் படி பெயர் மாற்றம் செய்ய 7(i), 7(ii)ன் Form(4)ன்படியும் மற்றும் சட்ட விதிகளின் 7(i)ன் 7(ii)ன் படி எவ்வித ஆவணங்கள் பெறாமல் கட்டணம் மட்டுமே பெறப்பட்டுள்ளது. இதை கவனத்தில் கொள்ளும் போது முழு விதிமீறல் நடைபெற்றுள்ளது. இதுபற்றி விபரம் ஈரோடு மின்பகிர்மான வட்ட ஈரோடு நகரியம் செ.பொ.க.எண்.15/2015, 20.4.15ல் எழுத்துபூர்வ கடித வரிசை 6மற்றும் 7–ல் பதில் தந்து செ.பொ. கையொப்பம் இட்டு கடிதம் தரப்பட்டுள்ளது. இணைப்பு இம் மனுவுடன் உள்ளது. எனவே MCM44(E) என்ற 48/1012 நேதாஜி ரோடு ஈரோடு–1 வீட்டிற்கு பெயர் மாற்றம் செய்கையில் பெறக்கூடிய

ஆவணங்கள் பெறப்படவில்லை என்பது கடிதத்தில் தெளிவாக தெரியவருகிறது. ஆவண கோப்பு அலுவலகத்தில் இல்லை என்பது ஏற்க இயலாத ஒன்று.

**4.2** ஈரோடு குறைதீர் மன்ற தலைவர் உத்தரவு கடிதம் பக்கம் **5** of **17**ல் **2** para-வில் வரிசை **1** முதல் **7** வரை மனுதாரர் ஆகிய நான் அனுப்பிய கடிதங்களின் பட்டியல் இட்டு தந்துள்ளார். ஆனால், page **5** of **17**ல் வரிசை எண்.**5**ல் (five) உள்ள ADE central க்கு அனுப்பப்பட்ட கடிதம் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட்டு அதன் பேரில் சட்டக் கருத்துரைக்கு உட்படுத்தியதாகவும் அதன்பேரில் மின்இணைப்பு வழங்கலாம் என கூறி மின்பகிர்மான வழக்கறிஞர் கருத்துரை கடிதம் தந்ததாக பதில் தரப்பட்டுள்ளது. அப்படி எனில் **2014**ஆம் வருடம் **2015**ஆம் வரும் ஆகிய வருடங்களில் அனுப்பப்பட்ட ஆட்சேபனை தடை மனு சட்ட அறிவிப்பு ஆகியன நிராகரிப்பு மற்றும் கவனத்தில் கொள்ளாமை.

**4.3** MCM **44** (E) ஈரோடு நகரியம் க.எண்.**48/1012** நேதாஜி சாலை, ஈரேடு–**1** உள்ள மின்இணைப்பு வீட்டில் **23.5.2015** அன்று விபத்து fire accident for un authorized building constructions work for violation அரசு துறையிடம் அனுமதி பெறாமல் கட்டுமான பணி மேற்கொண்ட போது தீ விபத்து ஏற்பட்டு இருவர் கீழே விழுந்து ஒருவர் உயிர் இழப்பு ஏற்பட்டுள்ளது.

**4.4** அனுமதியற்ற கட்டுமான பணி நடைபெற்றபோது அருகில் உயர்அழுத்த மின்கம்பியில் உராய்வு ஏற்பட்டு தூக்கி எறியப்பட்டு இருவரில் ஒருவருக்கு துர்மரணம் ஏற்பட்டு அதுசம்பந்தமாக AE(East) சுரேஷ் ஈரோடு நகரியம் கடிதம் மூலம் மனுதாரர் ஆகிய நான் தெரிவித்தும் அதன் பின்னிட்டு ஈரோடு தெற்கு காவல் நிலையம் மூலம் குற்ற வழக்கு பதிவு ஆகி அதில் காவல் ஆய்வாளர் வேண்டுகோளுக்கு இணங்க AE(East) ஈரோடு நகரியம் சுரேஷ் என்பவர் தன் வாக்குமூலத்தில் எழுத்து பூர்வமாக கடிதம் தந்துள்ளார். மேற்படி தீ விபத்து ஏற்பட்டு மரணம் அடைந்த குற்ற வழக்கு IPC இந்திய தண்டனை சட்டம் **304**A வழக்கில் இவரை அரசு தரப்பு சாட்சியாக பட்டியலில் சேர்த்து மாண்புமை நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**4.5** இதன் விபர அறிக்கையினை குறைதீர்மன்ற தலைவரின் முழுமையான பரிசீலனைக்கு நான் தந்தும் எடுக்கவில்லை. இதுபற்றிய விபரம் AE(E) ஈரோடு நகரியம் அலுவலகத்திற்கு **26.5.2015** அன்று விபத்து நிகழ்வு ஆகி உள்ளது. எக்காரணத்தை கொண்டும் மின்இணைப்பு தரவேண்டாம் என கூறி கடிதம் தரப்பட்டுள்ளது. ஈரோடு மாண்புமை குற்றவியல் நீதிமன்றத்தின் தொடக்க விசாரணையில் வழக்கு நடைமுறையில் உள்ளது. இதில் அரசு தரப்பு சாட்சியாக AE(E)

சுரேஷ் ஈரோடு நகரியம் சேர்த்து குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் பதிவு ஆகி உள்ளது. முழு விசாரணை தொடங்கும்போது Court Summon மூலம் TNEB AE(E) சுரேஷ் எங்கு பணியில் இருந்தாலும் நீதிமன்றத்தில் நேரிடையாக ஆஜராகி அரசு தரப்பு சாட்சியாக விசாரிக்கப் படுவார் என்பதே சட்டவிதி. இவ்விபர கோப்பினை குறைதீர்மன்றத்தில் முதல் ஆவணமாக தந்தும் அது பற்றிய விபரத்தை தன் உத்திரவில் கருத்துரை எடுக்காமல் புகார் ஆளான நபருக்கு சாதகமாக பதில் அளிப்பு செய்தமை சட்ட மீறுகை, மின்குறைதீர்பபாளர் அவர்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

4.6 புதிய விண்ணப்பம் மின்இணைப்பு பெற வேண்டி அளிப்பவரிடம் குற்ற வழக்குகள் ஏதேனும் மின்இணைப்பு தரும் வீட்டிற்கு எதிராக உள்ளதா ? என உறுதிமொழி படிவம் தாழ்வழுத்த வீடு விண்ணப்பதாரரின் உறுதிமொழி படிவம் வரிசை 1ல் கட்டிட வேலை முடிக்கப்பட்டு விட்டன, வயரிங் வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன, என வாசகம் வருகிறது. வீதிமீறல் கொண்டு கட்டிட வேலை முடிவு பெறாமல் புதிய மின்இணைப்பு MCM(E) 1250, 51, 52 ஆகியன தரப்பட்டுள்ளது.

4.7 தாழ்வழுத்த உறுதி மொழி படிவம் வரிசை எண்.6ல் இந்த கட்டிடம் (or) மின்இணைப்பு பெறுவதற்கு எதிராக எவ்வித வழக்குகள் (or) ஆட்சேபனை இல்லை என வாசகம் உள்ளது. இதை படித்து புகார் உள்ளான நபர் கையொப்பம் போட்டு விண்ணப்ப படிவம் தந்துள்ளார் ஆனால், முகவரி பெயர் இட்ட பகுதியில் கதவு எண், பெயர் கொண்டு எதுவும் நிரப்பப்படாமல் காலியாக உள்ளது. இங்கும் அனுமதியற்ற கட்டிடம் முழுமை பெறாமல் உறுமொழி படிவத்தில் வரிசை 6ன்படி வழக்கு குற்றவழக்குகள் இருப்பதை மூடிமறைத்து மின்இணைப்பு விதிமீறல் கொண்டு தரப்பட்டுள்ளது.

4.8 முறையற்ற வழியில் பெறப்பட்ட மின் இணைப்புகளை துண்டிக்க இறுதியாக எடுத்துரைக்கப்படும் இணைப்பை வேண்டி சட்டக்கருத்து மற்றும் விதிமீறல் கொண்ட அனுமதியற்ற கட்டிடத்தில் கிரிமினல் வழக்கு – ஒருவர் உயிர்இழப்பு அதில் அரசு சாட்சியாக மின்இணைப்பு வழங்கிய உதவி பொறியாளர்/கிழக்கு, ஈரோடு நகரியம், ஈரோடு அவர்களின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் புதிய மின் இணைப்பு தரக்கூடாது என்ற கருத்தினை ஏற்காமல் ஒரு தலைபட்சமாக புகார் கூறப்படும் நபருக்கு ஒத்துழைப்பு – முறையான விசாரணைக்கு உட்படுத்தாமை. சட்டக்கருத்துரை என்ற பெயரில் பல கடிதங்கள் நிராகரிப்பு மொத்தத்தில் பல குளறுபடிகள் நிறைந்து இருந்தும் அதனை சீர்தூக்கி பாராமல் முழுமையாக தீர்வை எட்டாது சட்டமீறுகை கொண்டு ஈரோடு

மின்பகிர்மானம், ஈரோடு நகரியம், ஈரோடு கிழக்கு மின் உதவி பொறியாளர் உட்பட அனைத்து மேல் பொறிஞர்களும் உறுதுணை புரிதல் சட்டமீறுகை.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

5.1 ஈரோடு கிழக்கு பிரிவுக்குட்பட்ட மின் இணைப்பு எண். MCM 44 வழங்கப்பட்டுள்ள வீட்டிற்கு புதிய மின் இணைப்போ, கூடுதல் மின் பளுவோ தரவேண்டாம் என திரு. கங்காதரன் அவர்களிடமிருந்து 05.07.2016 அன்று தான் முதல் முதலாக உதவி மின் பொறியாளர்/இபே/கிழக்கு/ஈரோடு அவர்களால் பதிவு தபால் மூலம் ஆட்சேபணை கடிதம் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் உதவி மின் பொறியாளர்/இபே/கிழக்கு/ஈரோடு அவர்கள் 18.07.2016 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக திரு.கங்காதரன் அவர்களுக்கு இது நாள் வரையில் அவர் குறிப்பிட்டுள்ள முகவரியில் இருந்து புதிய மின் இணைப்பு வேண்டி எந்த ஒரு விண்ணப்பமும் பெறப்பட வில்லை என்றும், அவ்வாறு விண்ணப்பம் பெறப்படும் பட்சத்தில் அவரது ஆட்சேபணை மனு மற்றும் தடை மனு, சட்ட அறிவிப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டும், வாரிய விதி முறைகளுக்கு உட்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

5.2 அதன் பின்னர் திரு.முகமது சிராஜ் அவர்களிடமிருந்து திரு.கங்காதரன் அவர்கள் ஆட்சேபணை தெரிவித்திருந்த முகவரிக்கு புதிய மின் இணைப்புகள் வழங்க கோரி 05.08.2016 அன்று விண்ணப்பம் பெறப்பட்டது. அதன் தொடர்பாக திரு.கங்காதரன் அவர்கள் அளித்த ஆட்சேபனை மனுவை கருத்தில் கொண்டு திரு.ஏ.ராஜேந்திரன், தமிழ்நாடு மின்சார வாரிய வழக்கறிஞர், ஈரோடு அவர்களிடம் உதவி மின் பொறியாளர்/இபே/கிழக்கு/ஈரோடு அவர்களால் அவ்வாறு மின்இணைப்பு வழங்கிட 08.09.2016 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக சட்டக் கருத்துரை கோரப்பட்டு, 15.09.2016 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக சட்டக் கருத்துரை பெறப்பட்டது. அதன் அடிப்படையில் திரு.முகமது சிராஜ் அவர்களிடம் பிணைமுறிவு பத்திரம் மற்றும் உரிய விண்ணப்பத்துடன் கூடிய சொத்து உரிமைக்கான ஆவணங்கள் பெற்று கொண்டு மூன்று புதிய மின் இணைப்புகள் உதவி மின் பொறியாளர்/இபே/கிழக்கு/ஈரோடு அவர்களால் 14.10.2016 அன்று கணினியில் பதிவு செய்யப்பட்டு 18.10.2016 அன்று மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

5.3 திரு. முகமதுசிராஜ் அவர்கள் மின் இணைப்பு எண்.44—ஐ திருமதி. சபிதாபீபி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதன் அடிப்படையில் 2011—ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதற்கு உண்டான கட்டணம் ரூ.200—ஐ Pr.No.ERD004AR1S1546/

dt.29.04.2011ல் வசூல் செய்யப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்பான ஆவணங்கள் வருவாய் பிரிவில் உள்ள மின் இணைப்பு கோப்புகளில் பல முறை தேடப்பட்டும் இதுநாள் வரை கிடைக்கப்பெறவில்லை.

5.4 23.05.2015 அன்று மின் இணைப்பு எண். 004–010–44 உள்ள கட்டிடத்தில் தீ விபத்து ஏற்பட்டது குறித்து உதவி மின் பொறியாளர்/இபே/கிழக்கு/ஈரோடு அவர்கள் ஆய்வு மேற்கொண்ட பொழுது மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கும் மின்பாதைக்கும் இடையே போதிய இடைவெளி அமைந்திருந்தது. எனினும் அக்கட்டிடப் பணிகள் மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டிருந்த சாரத்திற்கும் மின்பாதைக்கும் போதிய இடைவெளி இல்லாத காரணத்தினால் தீ விபத்து ஏற்பட்டது. இதன் தொடர்பாக மின் இணைப்பு எண்.004–010–44–ஐ அன்றைய தினமே துண்டிப்பு செய்யப்பட்டது. இது தொடர்பாக திரு.முகமதுசிராஜ் அவர்களிடமிருந்து மின்பாதை மாற்றி அமைக்கும் விண்ணப்பம் பெறப்பட்டு அதன் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு புதிய கம்பம் அமைத்து கட்டிடத்திற்கும் மின்பாதைக்கும் விபத்து ஏற்படாவண்ணம் போதிய இடைவெளி அமையும் வகையில் அம்மின்பாதை மாற்றி அமைக்கப்பட்டது. அவ்விபத்து தொடர்பாக காவல் ஆய்வாளர் ஈரோடு நகர் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள கடிதத்திற்கு 23.05.2015 அன்று ஏற்பட்ட விபத்தின் பொழுது நேதாஜி ரோடு வழியாக செல்லும் 22 கே.வி. தெற்கு ரயில்வே மின்பாதையில் மின்னூட்டம் இருந்தது என்று பதில் கடிதம் அளிக்கப்பட்டுள்ளது.

5.5 புதிய மின் இணைப்பு வேண்டி திரு.முகமதுசிராஜ் அவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்ட பொழுது அக்கட்டிடத்தில் ஒருவர் மின் விபத்தில் இறந்தது தொடர்பாக குற்றவழக்கு தொடரப்பட்டுள்ளது குறித்து எந்த ஒரு தகவலும் பெறப்படவில்லை. மேலும் அவ்வழக்கு நிலுவையில் உள்ளது தொடர்பாக எத்துறையிலிருந்தும் எவ்வித கடிதமோ, கோப்புகளோ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பெறப்படவில்லை. மேலும் திரு. முகமதுசிராஜ் அவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டதின் அடிப்படையில் களஆய்வு மேற்கொண்டதில் கட்டுமான பணிகள் முடிவுற்ற நிலையில் இருந்தது கண்டறியப்பட்டது.

5.6 22 கே.வி. தெற்கு ரயில்வே மின்பாதை என்பது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமானது என்றும் அம்மின்பாதை மூலம் தெற்கு ரயில்வேயிற்கு உயரழுத்த மின் இணைப்பு வழங்கப்பட்டு வருவதால் அம்மின்பாதைக்கு 22கே.வி தெற்கு ரயில்வே மின்பாதை என்று பெயரிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் 22 கே.வி தெற்கு

ரயில்வே மின்பாதையானது தெற்கு ரயில்வே மட்டுமின்றி ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மரப்பாலம், வளையக்கார வீதி, காந்திஜி ரோடு VVCR நகர், ஜீவானந்தம் ரோடு ஆகிய பகுதிகளுக்கும் அம்மின்பாதையில் இணைக்கப்பட்டுள்ள மின்மாற்றிகளின் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

5.7 மேலும் புதிய RSJ 40 அடி மின்கம்பமானது திரு.முகமதுசிராஜ் அவர்களிடமிருந்து பெறப்பட்ட மின்பாதை மாற்றி அமைக்கும் விண்ணப்பத்தின் அடிப்படையில் உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்குரிய அனுமதி பெறப்பட்டு மதிப்பீட்டுத் தொகையாக ரூ.34,010/—ஐ வசூலிக்கப்பட்ட பின்னர் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஈரோடு மாநகராட்சி மற்றும் உள்ளூர் திட்டக் குழுமம் ஆகிய அலுவலகங்களில் இருந்து பெறப்பட்ட கடிதங்களில் திரு.முகமதுசிராஜ் அவர்களின் க.எண்.48, நேதாஜி ரோடு, ஈரோடு என்ற முகவரிக்கு புதிய மின் இணைப்புகளோ அல்லது கூடுதல் மின்பளுவோ வழங்குவது குறித்த தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

5.8 திரு.முகமதுசிராஜ் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பத்தின் அடிப்படையில், திரு. கங்காதரன் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள ஆட்சேபணை மனுவினை கருத்தில் கொண்டு திரு.ஏ.ராஜேந்திரன், தமிழ்நாடு மின்சார வாரிய வழக்கறிஞர், ஈரோடு அவர்களிடமிருந்து 15.09.2016 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக உரிய சட்டக் கருத்துரை பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் திரு.முகமது சிராஜ் அவர்களிடம் பிணைமுறிவு பத்திரம் மற்றும் விண்ணபத்துடன் கூடிய சொத்து உரிமைக்கான ஆவணங்கள் பெற்று கொண்டு மூன்று புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அம்மின் இணைப்புகள் வழங்கப்பட்டதில் எவ்வித விதிமீறலும் நடைபெறவில்லை என்று பதிலுரை சமர்ப்பிக்கப்படுகிறது.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை :</u>

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 14.12.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்துவதற்கு இருவருக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், மனுதாரரின் 24.11.2017 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க 14.12.2017 அன்றைய கேட்புரை தள்ளிவைக்கப்பட்டு 24.1.2018 அன்று நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. தி. கங்காதரன், வழக்கறிஞர்/உயர்நீதிமன்றம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. G.V. பழனிவேல், செயற்பொறியாளர்/பகிர்மானம்/ நகர்புறம்/ ஈரோடு மற்றும் திரு. S. ஆனந்த், உதவி பொறியாளர்/O&M/ கிழக்கு/ஈரோடு ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

**7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

7.1 மேல்முறையீட்டாளர் தி. கங்காதரன் அவர்கள் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் புதிய மின் இணைப்பு விதிமுறைகள், மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிமுறைகளுக்கு எதிராக தனிப்பட்ட விபரங்களையும் (புகார் மனு) கோப்புகளை ஆய்வு செய்யாது உதவி பொறியாளர் அவர்கள் மின் இணைப்பு பெயர் மாற்றம் மற்றும் புதிய மின்னிணைப்புகள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

7.3 மின் இணைப்பு MCM(44) East சபிதாபீபி என்பவர் பெயரில் இருந்து M. முகமது சிராஜ் என்ற நபரின் பெயருக்கு தமிழ்நாடு மின் வழங்கல் விதிகளில் அறிவுறுத்தப்பட்ட ஆவணங்களை பெறாமல் முறையற்ற வகையில் பெயர் மாற்றம் செய்துள்ளதாக தெரிவித்தார்.‘

7.4 மேலும், பெயர் மாற்றம் செய்வதற்குண்டான தமிழ்நாடு மின் வழங்கல் விதி 7(ii) ன் படி உரிய விபரங்கள் பெறப்படாமல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், மின்இணைப்பு விகிதப்பட்டி Tariff-ls இருந்து Tariff-Vக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்ட 29.4.2011 அன்றே விண்ணப்பம் பெறப்பட்டு அன்றே கட்டுமான பணிக்காக மின் விகிதப்பட்டி மாற்றம் தரப்படுகிறது. எந்த ஆவணமும் உரிய வகையில் பெறப்படாத போது எந்த அடிப்படையில் விகிதப்பட்டி ஆ. முகமது சிராஜ் பெயரில் விண்ணப்பம் அளித்ததின் பேரில் மாற்றம் செய்யப்பட்டது என்பது தெளிவு படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

7.5 10.2.1971 ஆம் ஆண்டு சபீதாபீபி என்பவர் பெயரில் MCM (44)(E) மின்இணைப்பு தரப்படுகிறது. அதற்கு உண்டான ஆவணங்கள் த.அ.உ.ச. 2005ன் கீழ் தரப்படுகிறது. ஆனால்

29.4.2011 ம் ஆண்டு ஆ.முகமது சிராஜ் என்பவர் பெயரில் பெயர் மாற்றம் செய்த ஆவணம் கோப்பில் இல்லை என கூறுவது மிகுந்த ஐயப்பாட்டை தோற்றுவிப்பதாகவும் தெரிவித்தார்.

7.6 5.7.2016 அன்று தன்னால் ADE TNEB Central அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றே சட்டக் கருத்துரை பெற அனுப்பப்பட்டதாகவும், அதற்கு முன் 2014ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அரசு கடிதங்கள், அரசு துறை மூலம் அனுப்பப்பட்ட கடிதங்கள் தீ விபத்து காரணமாக ஒருவர் மரணம் அடைந்ததின் தொடர்ச்சியாக AE (E) சுரேஷ் அவர்கள் அளித்த வாக்குமூலம் ஆகிய அனைத்தையும் சட்டக் கருத்துருவுக்கு உட்படுத்தவில்லை எனவும் அனுமதியற்ற கட்டுமானம் தொடர்பாக உள்ளூர் திட்டக்குழுமம் உதவி இயக்குநர், வீட்டு வசதி வணிக வளாகம் மூலம் கடிதம் வரப்பெற்றுள்ளதை ஆய்வுக்கு உட்படுத்தாதையும் கவனத்தில் கொள்ள வேண்டினார்.

7.7 மேலும், தமிழ்நாடு மின்பகிர்மான விதிகளுக்கு எதிராகவும் கட்டிடம் நிறைவு பெறாத நிலையில் எவ்வித பாதுகாப்பு நடைமுறைகளையும் கருத்தில் கொள்ளாமல் எதிர்மனுதாரரால் புதிய மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளதாக தெரிவித்து, நிறைவு பெறா நிலையில் உள்ள கட்டிடத்தின் புகைப்படங்களையும் மின்குறைத்தீர்ப்பாளரிடம் சமர்பித்தார். அவ்வாறு நிறைவுபெறாத கட்டிடத்திற்கு மின் இணைப்புகள் வழங்கியுள்ளதால் அக்கட்டிடத்தின் பக்கத்தில் குடியிருக்கும் தங்களின் உயிருக்கு உடமைக்கும் பாதுகாப்பில்லையெனவும் தெரிவித்தார்.

## 8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் சார்பில் கலந்து கொண்ட திரு. G.V. பழனிவேல், செயற்பொறியாளர்/ பகிர்மானம் / நகர்புறம்/ஈரோடு மற்றும் திரு. S. ஆனந்த், உதவி பொறியாளர்/O&M/ கிழக்கு/ ஈரோடு ஆகியோர் கலந்து கொண்டு தங்களது பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்கள்.

8.2 திரு.கங்காதரன் அவர்கள் அளித்த ஆட்சேபனை மனுவை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின்சார வாரிய வழக்கறிஞர், ஈரோடு அவர்களிடம் உதவி மின் பொறியாளர்/இபே/கிழக்கு/ஈரோடு அவர்களால் சட்டக் கருத்துரை கோரப்பட்டு, 15.09.2016 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக சட்டக் கருத்துரை பெறப்பட்டதாகவும் அதன் அடிப்படையிலேயே திரு.முகமது சிராஜ் அவர்களிடம் பிணைமுறிவு பத்திரம் மற்றும் உரிய விண்ணபத்துடன் கூடிய சொத்து உரிமைக்கான

ஆவணங்கள் பெற்று கொண்டு மூன்று புதிய மின் இணைப்புகள் உதவி மின் பொறியாளர்/இபே/கிழக்கு /ஈரோடு அவர்களால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

8.3 மேலும் மின் இணைப்பு எண்.44–ஐ திருமதி.சபிதாபீபி என்பவரிடமிருந்து கிரயம் பெற்றதன் அடிப்படையில் 2011–ஆம் ஆண்டில் திரு. முகமதுசிராஜ் அவர்களின் பெயருக்கு முறையான ஆவணங்கள் பெற்றபின் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும் அதன் தொடர்பான ஆவணங்கள் வருவாய் பிரிவில் உள்ள மின் இணைப்பு கோப்பில் பல முறை தேடப்பட்டும் இந்நாள்வரை கிடைக்கப்பெறவில்லையெனவும் தெரிவித்தனர்.

8.4 கட்டிடத்தில் தீ விபத்து ஏற்பட்டது குறித்து உதவி மின் பொறியாளர்/இபே/கிழக்கு/ஈரோடு அவர்கள் ஆய்வு மேற்கொண்ட பொழுது மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கும் மின்பாதைக்கும் இடையே போதிய இடைவெளி அமைந்திருந்தது. எனினும் அக்கட்டிடப் பணிகள் மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டிருந்த சாரத்திற்கும் மின்பாதைக்கும் போதிய இடைவெளி இல்லாத காரணத்தினால் தீ விபத்து ஏற்பட்டதாகவும் இதன் தொடர்பாக மின் இணைப்பு எண்.004–010–44–ஐ அன்றைய தினமே துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் இது தொடர்பாக திரு.முகமதுசிராஜ் அவர்களிடமிருந்து மின்பாதை மாற்றி அமைக்கும் விண்ணப்பம் பெறப்பட்டு புதிய கம்பம் அமைத்து கட்டிடத்திற்கும் மின்பாதைக்கும் விபத்து ஏற்படாவண்ணம் போதிய இடைவெளி அமையும் வகையில் அம்மின்பாதை மாற்றி அமைக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

8.5 புதிய மின் இணைப்பு வேண்டி திரு.முகமதுசிராஜ் அவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்ட பொழுது அக்கட்டிடத்தில் ஒருவர் மின் விபத்தில் இறந்தது தொடர்பாக குற்றவழக்கு தொடரப்பட்டுள்ளது குறித்து எந்த ஒரு தகவலும் பெறப்படவில்லையெனவும் திரு. முகமதுசிராஜ் அவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டதின் அடிப்படையில் களஆய்வு மேற்கொண்டதில் கட்டுமான பணிகள் முடிவுற்ற நிலையல் இருந்ததாகவும் தெரிவித்தார். எனவே, அம்மின் இணைப்புகள் வழங்கப்பட்டதில் எவ்வித விதிமீறலும் நடைபெறவில்லையெனவும் தெரிவித்தனர்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

**9.1** மேல்முறையீட்டாளரின் கோரிக்கையானது அவரின் மின் இணைப்பு பற்றியது அல்ல. அதாவது, இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையானது, திரு.முகமதுசிராஜ் என்பவருக்கு வழங்கப்பட்ட மின் இணைப்புகளை மின் துண்டிப்பு செய்வதாகும்.

**9.2** மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பு சம்பந்தமாக முறையீடு செய்யாமல் அடுத்தவரின் மின்இணைப்பை பற்றி முறையீடு செய்துள்ளதால் முதற்கண் இந்த மேல்முறையீட்டாளர் முறையீட்டாளர் என்ற வரையறைக்குள் வருகின்றாரா என்பதை ஆராய வேண்டும். எனவே, நான் மன்றவிதியில் முறையீட்டாளர், நுகர்வோர், முறையீடு ஆகியவற்றிற்கு கொடுக்கப்பட்ட பொருள் விளக்கத்தை ஆராய விரும்புகிறேன். அந்த பொருள் விளக்கங்கள் 2(உ), 2(ஊ) & 2(எ)ல் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் விதியில் உள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*2(உ) "முறையீட்டாளர்" என்பது:–*

*(i) புதிய இணைப்புக்கான மனுதாரர்களை உள்ளடக்கிய பகிர்வு உரிமம் பெற்றவரால் மின்சாரம் வழங்கப்பட்ட நுகர்வோர்;*

*(ii) நிறுமச்சட்டம், 1956 (1956 ல் 1) அல்லது தற்போது நடைமுறையில் உள்ள எந்த ஒரு சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு தன்னார்வ கூட்டமைப்பு ;*

*(iii) முறையீடு செய்த மைய அரசு அல்லது மாநில அரசு;*

*(iv) ஒரே அக்கரை கொண்ட அதிகப்படியான நுகர்வோர் இருக்கும்போது, ஒருவரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரோ ;*

*(v) நுகர்வோர் இறந்திருந்தால், அவரது சட்டப்படியான வாரிசுதாரர்கள் அல்லது சார்பாளர்கள்;*

*2(ஊ) "முறையீடு" (Complaint) என்பது கீழே சொல்லப்பட்டுள்ள குறை பற்றி ஒரு முறையீட்டாளர் எழுத்து மூலமாய் கொடுக்கப்படுவது.*

*(i) உரிமம் பெற்றவரால் அளிக்கப்பட்ட மின்சார வினியோகத்தில் உள்ள குறைபாடு அல்லது குறைவு;*

*(ii) மின் இணைப்பு வழங்குவதில் உரிமம் பெற்றவர் செய்யும் நியாயமற்ற அல்லது கட்டுப்படுத்தப்பட்ட தொழில் பழக்கம்;*

*(iii) மின்சாரம் பயன்படுத்துதல் மற்றும் தொடர்புடைய பணிக்கு, ஆணையம் நிர்ணயித்த கட்டணத்தை விட அதிகமாய் கேட்பது;*

*(v) தற்சமயம் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு எதிராக, பொது வாழ்க்கைக்கு பாதுகாப்பற்றதும் இடர் அளிக்கக்கூடியதுமான மின்சாரப்பணி.*

*2(எ) "மின் நுகர்வோர்" என்பவர் உரிமம் பெற்றவரால் அல்லது அரசால் அல்லது இந்தச் சட்டம் அல்லது அந்தச் சமயத்தில் அமலிலுள்ள ஏதாகிலும் பிறச்சட்டம் மூலம் மின்சாரத்தை பொது மக்களுக்கு விநியோகம் செய்ய அமர்த்தப்பட்ட நபரால், சொந்த உபயோகத்திற்காக மின்சாரம் விநியோகிக்கப்பட்டவர். மேலும், எந்த நபரின் வீடு, மின் கருவிகளால் மின்சாரம் பெறுவதற்கு உரிமம் பெற்றவர் அல்லது அரசு அல்லது அனுமதிக்கப்பட்ட பிற நபர் ஆகியோரின் மின் அமைப்புகள் அத்தருணத்தில் இணைக்கப்பட்டுள்ளதோ, அவரும் "மின் நுகர்வோர்"*

**9.3** மேற்கண்ட மூன்று பொருள் விளக்கங்களையும் சேர்த்துப் படிக்கும்பொழுது நாம் அறிவது ஒருவரின் சொந்த உபயோகத்தற்கு பெற்றுள்ள மின்சாரம் மற்றும் அது சம்பந்தமான 2(ஊ)ல் விவரிக்கப்பட்டுள்ள குறைகளை மட்டும்தான் மன்றமும் மின்குறைதீர்ப்பாளரும் தீர்வு செய்ய முடியும் என்று தெரிகிறது.

**9.4** மேற்கூறிய நிலையில் இந்த மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்ய வேண்டிய நிலையில் இருந்தபோதிலும் மேல்முறையீட்டாளரின் வாதத்தில் திரு. முகமது சிராஜ் அவர்களுக்கு கட்டிடம் நிறைவு பெறாத நிலையிலும் பாதுகாப்பற்ற வகையிலும் எதிர்மனுதாரர்களால் புதிய மின்இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பாதுகாப்பு அம்சங்கள் சம்பந்தமான வாதங்களை மட்டுமே கருத்தில் கொண்டு மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.5** மேல்முறையீட்டாளரின் வாதுரையில் தமிழ்நாடு மின்பகிர்மான விதிகளுக்கு எதிராகவும் கட்டிடம் நிறைவு பெறாத நிலையிலும் எவ்வித பாதுகாப்பு நடைமுறைகளையும் கருத்தில் கொள்ளாமல் எதிர்மனுதாரரால் புதிய மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

**9.6** எதிர்மனுதாரர்களோ திரு. முகமதுசிராஜ் அவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டதின் அடிப்படையில் களஆய்வு மேற்கொண்டதில் கட்டுமான பணிகள் முடிவுற்ற நிலையில் இருந்ததாகவும் அதன்பிறகே மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

**9.7** இது சம்பந்தமாக மேல்முறையீட்டாளர் சமர்பித்துள்ள புகைப்படங்களில் திரு. முகமதுசிராஜ் அவர்களின் கட்டிடமானது நிறைவு பெறா நிலையிலேயே புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. மேலும் அந்த புகைப்பட நகல்களில் அப்புகைப்படங்கள் 22.01.2018 அன்று எடுக்கப்பட்டதாக பதிவாகியுள்ளது. இதன் மூலம் கட்டிடம் நிறைவு பெறா நிலை தற்பொழுது வரை தொடர்வதாகவும் அறியமுடிகிறது.

**9.8** சரியான முறையில் கள ஆய்வு செய்யப்படாமலும், தமிழ்நாடு மின்பகிர்மான விதிமுறைகளுக்கெதிராகவும், கட்டிடம் நிறைவு பெறா நிலையிலேயே புதிய மின் இணைப்புகள் வழங்கிய எதிர்மனுதாரர்களின் செயல் மிகுந்த கண்டனத்திற்குறியது.

**9.9** எனவே, உரிமதாரரின் அலுவலரான சம்பந்தப்பட்ட மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் நிறைவு பெறா நிலையை நேரில் ஆய்வு செய்யுமாறும், மேல்முறையீட்டாளர் தெரிவித்தபடி கட்டிடம் நிறைவு பெறா நிலையில் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருந்தால் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

**10. <u>கவனிப்பாய்வு</u>**

**10.1** **1991–**ஆம் ஆண்டு சபீதாபீபி என்பவர் பெயரில் வழங்கப்பட்ட MCM 44(E) என்ற மின் இணைப்பின் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மேல்முறையீட்டாளருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் **2005**ன் கீழ் வழங்கப்பட்டுள்ள நிலையில் **2011–**ஆம் ஆண்டு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டது தொடர்பான ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதில் நம்பகத் தன்மையில்லை. உரிமம்தாரரின் இச்செயல் கண்டிக்கத்தக்கதாகும். ஆவணங்களை பாதுகாத்து வைக்கத்தவறிய அலுவலர் மற்றும் பணியாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கிறேன்.

**11. <u>முடிவுரை :</u>**

**11.1** மேற்கண்ட பத்தி–**9**ல் உள்ள தீர்வுகளின்படி உரிமதாரரின் அலுவலரான சம்பந்தப்பட்ட மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் நிறைவு பெறா நிலையை நேரில் ஆய்வு செய்யுமாறும், மேல்முறையீட்டளர் தெரிவித்தபடி கட்டிடம் நிறைவு பெறா நிலையில் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருந்தால் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

**11.2** மேற்கண்ட தீர்வுடன், இந்த மேல்முறையீட்டு மனு எண்.**65/2017** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. தி. கங்காதரன், பி.ஏ., பி.எல்.,
வழக்கறிஞர் உயர்நீதி மன்றம்,
முகமை அலுவலகம்
46, நேதாஜி சாலை, ஈரோடு–638 001.

2) செயற் பொறியாளர்/இ&பே/நகரியம்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். ரோடு, ஈரோடு–638 009.

3) உதவி செயற் பொறியாளர்/இ&பே/டவுன்/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். ரோடு, ஈரோடு–638 009.

4) உதவி பொறியாளர்/ இ&பே /கிழக்கு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். ரோடு, ஈரோடு–638 009.

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர்குறைதீர்க்கும் மன்றம்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். ரோடு, ஈரோடு–638 009.

6) தலைவர் & நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.